# DEPOSITION OF WITNESS.
## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR
## S.C. No. 119/2025
## PROSECUTION WITNESS No - 6

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ரமேஷ் | **Caste** | : |
| **Father/ Husband Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of February 2026.**

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. பிரிவு 317 குவிமுச–ன் படி மனு தாக்கல் செய்து எதிரியின் அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார். )**

**முதல் விசாரணை :**

நான் தற்போது பாலவிடுதி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.11.2024 ஆம் தேதி பசுபதிபாளையம் காவல்நிலைய உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது சுமார் 16.30 மணியளவில் கணபதி, த/பெ.சுப்பையா, அழகம்மாள்புரம், பாலவிடுதி, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர் அரசு போக்குவரத்து கழக புதுக்கோட்டை புறநகர் கிளையில் ஓட்டுநராக பணிபுரிந்து வந்ததாகவும் TN 55 N 1098 என்ற பதிவெண் கொண்ட பேருந்தில் புதுக்கோட்டையிலிருந்து கோயமுத்தூருக்கு செல்லும் வழியில் கரூர் திருமாநிலையூர் ரவுண்டான அருகே மாலை சுமார் 3.30 மணியளவில் சென்று கொண்டிருந்தபோது தினேஷ்குமார், த/பெ.பாலசுப்பிரமணியன், முதல் கிழக்கு தெரு, திருமாநிலையூர், கரூர் என்பவர் திடிரென பேருந்தை மறித்து நிறுத்துடா தேவிடியா மவனே என்று அசிங்கமான வார்த்தையால் திட்டி பெரிய கல்லை

எடுத்து பேருந்தின் முன் பக்க கண்ணாடியை உடைத்து விட்டு தப்ப முயன்றபோது உடன் வந்த நடத்துநர் வெங்கடேசன், த/பெ.சுப்பிரமணியன் என்பவர் பிடித்து பசுபதிபாளையம் காவல்நிலையத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்து நடவடிக்கை எடுக்க கொடுத்த புகாரின் அடிப்படையில் பசுபதிபாளையம் காவல்நிலையக்குற்ற எண். 399/2024, சட்டப்பிரிவுகள் 126(2), 296(பி), 351(3) பா.நி.ச. உ/இ. 3(1) தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம்விளைவித்தல் தடுப்புச்சட்டத்தின் (TNPPDL Act) படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை இது தான். அது அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் அளித்த புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 17.15 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் ஸ்ரீநாத், கிருபாகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகஜர் இதுதான். அது ஏற்கனவே அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **நான் தயார் செய்த மாதிரி வரைபடம் இதுதான். அது அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் 17.30 மணிக்கு சம்பவத்திற்கு பயன்படுத்திய கருங்கல் ஒன்றை சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றினேன். சம்பவ சாட்சிகளான ஓட்டுநர் கணபதி, நடத்துனர் வெங்கடேசன், பேருந்தில் பயணம் செய்த பயணியான வெற்றிவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்கமூலம் பதிவு செய்தேன். பின்னர் 17.45 மணிக்கு வழக்கின் எதிரி தினேஷ்குமார் என்பவரை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற வழிக்காவலுக்கு அனுப்பி வைத்தேன். ஆஜர் எதிரியை என்னால் அடையாளம் காட்ட முடியும். ஆஜர் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. பேருந்தின் கண்ணாடி சேதமதிப்பீடு சான்று பெறுவதற்காக உதவிபொறியாளர் தானியங்கி பணிமனை, தமிழ்நாடு அரசு போக்குவரத்து

அலுவலர், திண்டுக்கல் மாவட்டம் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அளித்து 08.11.2024 ஆம் தேதியன்று சேதமதிப்பீடு சான்று பெற்றேன். அந்த சேதமதிப்பீடு சான்று இதுதான். அது ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் வழக்கில் எனது விசாரணை முடித்து புலன்விசாரணைக்காக காவல்ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் இடையே 2 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் 3.30 மணி என்றால் சரிதான். காவல்நிலையத்தில் புகார் பெறப்பட்ட நேரம் 4.30 மணி என்றால் சரிதான். புகார் பெறுவதற்கு 1மணி நேரம் காலதாமதம் ஏற்பட்டது என்றால் சம்பவ இடத்திலிருந்து எதிரியை பிடித்து கொண்டு வந்து ஆஜர் செய்ததில் தான் காலதாமதம் ஏற்பட்டது. முதல் தகவல் அறிக்கை 16.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரர், நடத்துநர், பேருந்தில் வந்த பயணி மற்றும் எதிரி ஆகியோர் அந்த சமயத்தில் காவல்நிலையத்தில் தான் இருந்தார்கள். முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரரிடம் கையெழுத்து பெற்றுள்ளீர்களா என்றால் ஞாபகமில்லை. பார்வை மகஜர் சாட்சிகள், கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் அனைவரையும் நான் விசாரித்துள்ளேன். சம்பவ தினத்தன்று தான் விசாரித்தேன். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்றே நீதிமன்றத்திற்கு எதிரியுடன் சேர்ந்தே நீதிமன்ற காவலுக்கு அனுப்பும்போது அனுப்பினேன். முதல் தகவல் அறிக்கையுடன் நான் பதிவு செய்த சாட்சிகள் வாக்குமூலத்தையும் அனுப்பி வைத்துள்ளேன். உங்கள் வரைபடத்தில் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள பூக்கடை பற்றி குறிப்பில்லை என்று சொன்னால் முக்கியமானவைகள், பிரதான இடங்களை

மட்டும் தான் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன். நான் பார்த்த போது பூக்கடை அங்கு இல்லை. சம்பவ இடத்திற்கு எதிர்புறத்தில் ஒரு பூக்கடையும், மெக்கானிக்கடையும் உள்ளது என்றால் பிரதான இடங்களை மட்டும் தான் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன். மேற்சொன்ன இரண்டு கடைகள் அங்கு தான் உள்ளது என்றும் அவைகளை சாட்சியாக விசாரித்தால் உண்மை தெரியவரும் என்பதால் நீங்கள் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் இருவேறு கையெழுத்துக்கள் உள்ளது என்றும் மேலும் கல்லின் அளவு குறிப்பிட்ட இடத்தில் வேறு வேறு கையெழுத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் "கரு" என்ற வார்த்தை இடைச்சொறுகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல்சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் காவல்நிலைய புள்ளி விவரத்திற்காக எதிரி மீது தவறாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகளின் வாக்குமூலங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளன என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து எந்த சான்று பொருட்களும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.17 17:27:25 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.